# Fair Practice Code for Retail Microfinance

## Tamil

# சில்லறை நுண்கடனுக்கான நேரிய நடத்தை குறியீடு

அவ்வப்போது தன்னுடைய சுற்றறிக்கைகள் மூலம் இந்திய ரிசர்வ் வங்கி வழங்கிய வழிகாட்டுதலின்படி, இயக்குநர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சில்லறை நுண்கடன் கடன் வாங்குபவர்களுக்கான நியாயமான நடைமுறைக் குறியீட்டை வங்கி ஏற்றுக்கொண்டது. கடனின் முக்கியமான அம்சங்கள் பின்வருமாறு:

i) **கடனுக்கான விண்ணப்பங்கள்**

கடன் விண்ணப்பப் படிவத்தில், செயலாக்கத்திற்காக செலுத்த வேண்டிய கட்டணம் மற்றும் கட்டணங்கள் (ஏதேனும் இருந்தால்) மற்றும் கடன் விண்ணப்பத்தை ஏற்காத பட்சத்தில் கடன் வாங்கியவர்கள், அவர்கள் கோரும் கடனின் அளவைப் பொருட்படுத்தாமல் திருப்பிச் செலுத்த வேண்டிய கட்டணம், முன்கூட்டியே செலுத்தி முடிப்பது மற்றும் வட்டியைப் பாதிக்கும் பிற விஷயங்கள் உள்ளிட்ட விரிவான தகவல்களை வங்கி வழங்கும். விண்ணப்பப் படிவம் கடன் வாங்கியவருக்குப் புரியும் மொழியில் வழங்கப்படும்.

ii) **செயலாக்கம்**

a. அனைத்து கடன் விண்ணப்பங்களுக்கும் அந்த விண்ணப்பம் எந்த காலக்கெடுவிற்குள் பரிசீலிக்கப்பட்டு முடிவு அறிவிக்கப்படும் என்பதைக் குறிப்பிட்டு அதைப் பெற்றதற்கான ஒப்புதலை வங்கி வழங்கும்.
b. வங்கி கடன் விண்ணப்பத்தை சரிபார்க்கும் மற்றும் கூடுதல் விவரங்கள் / ஆவணங்கள் தேவைப்பட்டால், அவை விண்ணப்பதாரரிடமிருந்து கோரப்படும்.
c. விண்ணப்பத்தை வங்கி தாமதமின்றி பரிசீலிக்கும். ஒருவேளை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால், வங்கி நிராகரிப்பதற்கான காரணத்தை விண்ணப்பதாரருக்கு நேரடி அல்லது டிஜிட்டல் தொடர்பு மூலம் ஒரு மாதத்திற்குள் தெரிவிக்கும்.

iii) **கடன் மதிப்பீடு மற்றும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்**

a.வங்கியின் நடப்பு அறிவுறுத்தல்கள் மற்றும் வங்கியின் கடன் கொள்கையின்படி கடன் விண்ணப்பம் சரியான முறையில் மதிப்பீடு செய்யப்படுவதை ஒப்பளிப்பு வழங்கும் அதிகாரி உறுதிசெய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. கடன் வாங்குபவரின் கடன் தகுதியின் மீது விவேகமான நடவடிக்கைகளுக்கு மாற்றாக போதுமான அளவு மார்ஜின் மற்றும் பாதுகாப்பு கிடைப்பது இருக்காது.
b. அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் பிற முன்னெச்சரிக்கைகள் வங்கியால் முறையாக கடன் வாங்குபவருக்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கப்படும்.
c. கடன் வரம்பு பற்றி அதன் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கடனாளருக்கு புரியும் மொழியில் வங்கியானது கடன் பெறுபவருக்கு/உத்தரவாததாரருக்குத் தெரிவிக்கும் மற்றும் கடனாளி/உத்தரவாததாரர் தனது முழு அறிவுடன் இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் ஏற்பினை வங்கி பெறும்.
d. கடன் ஒப்பந்தத்தில் மேற்கோள் காட்டப்பட்டுள்ள அனைத்து இணைப்புகளின் நகல்களுடம், கடன் ஒப்பந்தத்தின் நகலும் கடன் பெறுபவர் புரிந்துகொள்ளும் மொழியில் அவரிடம் வழங்கப்படும்.
e. அனுமதிக் கடிதம் / கடன் ஒப்பந்தத்தில் வங்கியின் விருப்பப்படி மட்டுமே கடன் வசதிகள் நீட்டிக்கப்படும் என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கும்.
f. அனுமதிக் கடிதம் / கடன் ஒப்பந்தத்தில் வங்கியின் விருப்பப்படி மட்டுமே கடன் வசதிகள் நீட்டிக்கப்படும் என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கும். உண்மைத் தாளில் வெளிப்படையாகக் குறிப்பிடப்படாத எந்தத் தொகையும் கடன் வாங்குபவரிடம் வசூலிக்கப்படாது.
g. வங்கி அதன் அனைத்து அலுவலகங்களிலும் நுண்நிதிக் கடன்களுக்கு விதிக்கப்படும் குறைந்தபட்ச, அதிகபட்ச மற்றும் சராசரி வட்டி விகிதங்களை, அது வெளியிடும் இதழ்களில் (தகவல் கையேடுகள் / துண்டுப்பிரசுரங்கள்) (ஏதேனும் இருந்தால்) மற்றும் அதன் இணையதளத்தில் விவரங்களை காட்சிப்
h. நுண்நிதி கடன்களுக்கான வட்டி விகிதங்கள் மற்றும் பிற கட்டணங்கள்/விதிப்புகள் கந்து வட்டியாக இருக்கக்கூடாது.
I. சில சூழ்நிலைகளில் திருப்பிச் செலுத்தப்படும் கட்டணத்தின் அளவு RBI-யின் தற்போதுள்ள வழிகாட்டுதல்களால் நிர்வகிக்கப்படும்.
j. கடன் அல்லாத தயாரிப்புகளை வழங்குவது கடன் வாங்குபவர்களின் முழு ஒப்புதலுடன் இருக்க வேண்டும் மற்றும் அத்தகைய தயாரிப்புகளுக்கான கட்டண அமைப்பு கடன் அட்டையிலேயே கடன் வாங்கியவருக்கு வெளிப்படையாகத் தெரிவிக்கப்படும்.
k. வங்கி கடன் வாங்குபவருக்கு அவர்கள் புரிந்துகொள்ளும் மொழியில் கடன் அட்டையை வழங்கும், அதில் பின்வருவன அடங்கும்:

(i) கடன் வாங்குபவரை போதுமான அளவு அடையாளம் காட்டும் தகவல்.
(ii) விலை நிர்ணயம் பற்றிய எளிமைப்படுத்தப்பட்ட தாள்.
(iii) கடன் சார்ந்த பிற அனைத்து விதிகள் & நிபந்தனைகள்.
(iv)பெறப்பட்ட தவணைகள் மற்றும் இறுதி டிஸ்சார்ஜ் உட்பட அனைத்து திருப்பிச் செலுத்துதல்களுக்கான ஏற்பளிப்புகள் மற்றும்
(v) வங்கியின் நோடல் அதிகாரியின் பெயர் மற்றும் தொடர்பு எண் உட்பட, குறை தீர்க்கும்

**iv) விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் உள்ள மாற்றங்கள் உட்பட கடனை அளித்தல்**

a. அத்தகைய ஒப்புதலுக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க அனுமதிக்கப்பட்ட கடன்கள் சரியான நேரத்தில் வழங்கப்படுவதை வங்கி உறுதி செய்யும்.
b. வட்டி மற்றும் கட்டணங்கள் போன்ற அனுமதியின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் ஏதேனும் மாற்றங்கள் இருந்தால், மாற்றங்களைச் செய்வதற்கு முன் கடன் வாங்குபவருக்குத் தெரிவிக்கப்படும்.
c. வட்டி விகிதங்கள் மற்றும் கட்டணங்களில் ஏதேனும் மாற்றங்கள் செய்யப்படுமானால் கடன் வாங்குபவருக்கு உரிய அறிவிப்பை வழங்கிய பின்னரே எதிர்காலத்தில் முன்னோக்கி மட்டுமே செயல்படுத்தப்படும்.

**v) பணப் பட்டுவாடாவுக்குப் பிந்தைய மேற்பார்வை**

a. பணப் பட்டுவாடாவுக்குப் பிந்தைய மேற்பார்வை ஏதும் இருந்தால், ஒப்பளிப்புக் கடிதம் அளிக்கும் நேரத்தில் அது கட்டுத்தளைகள் விதிக்கப்படும். கண்காணிப்புச் செலவை வங்கி அல்லது கடன் வாங்கியவர் ஏற்பாரா என்பதையும் ஒப்பளிப்புக் கடிதம் குறிப்பிடும்.
b. ஒப்பந்தத்தின் கீழ் பணம் செலுத்துதல் அல்லது செயல்திறனைத் திரும்பப் பெறுதல் / விரைவுபடுத்துதல் என்ற முடிவை எடுப்பதற்கு முன், கடன் ஒப்பந்தத்தில் அத்தகைய நிபந்தனை இல்லை என்றால், கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அல்லது நியாயமான காலக்கெடுவில் கடன் வாங்குபவர்களுக்கு வங்கி அறிவிப்பை வழங்கும்.
c. நுண்நிதிக் கடனின் பிணையமற்ற தன்மையை உறுதிசெய்ய, கடன் வாங்குபவரின் வைப்புக் கணக்கில் உள்ள மீள் உரிமையுடன் ~~கடன் இணைக்கப்படாது.~~

**vi) பிற**

a. கடன் அனுமதி ஆவணங்களின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளைத் தவிர, கடன் வாங்குபவர்களின் விவகாரங்களில் வங்கி தலையிடாது.
b. கடன் பெற்றவரால் முன்னர் வெளியிடப்படாத தகவல்கள் வங்கியின் கவனத்திற்கு வந்திருந்தால், கடன் வாங்கியவரிடமிருந்து தேவையான தகவல்களைப் பெறுவதற்கும் தன்னுடைய நலனைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையைத் தொடங்குவதற்கும் வங்கிக்கு உரிமை உண்டு.
c. சமூகத்தின் நலிந்த பிரிவினருக்காக உருவாக்கப்பட்ட கடன்-இணைக்கப்பட்ட திட்டங்களில் வங்கி பங்கேற்கும்போது, கடன் வழங்கும் விஷயத்தில் பாலினம், சாதி மற்றும் மதம் ஆகியவற்றின் அடிப்படையில் வங்கி பாகுபாடு காட்டாது.
d. வங்கியோ அல்லது அதன் முகவர்களோ, கடனை மீட்டெடுப்பதில் பின்வருபவை போன்ற எந்தவொரு கடுமையான முறைகளையும் ஈடுபடுத்தாது:

(i) அச்சுறுத்தும் அல்லது வசைமொழியைப் பயன்படுத்துதல்

(ii) கடனாளியை தொடர்ந்து அழைப்பது மற்றும் / அல்லது கடனாளியை காலை 9:00 மணிக்கு முன் மற்றும் மாலை 6:00 மணிக்குப் பிறகு அழைப்பது.

(iii) கடன் வாங்கியவரின் உறவினர்கள், நண்பர்கள் அல்லது சக ஊழியர்களைத் துன்புறுத்துதல்

(iv) கடன் வாங்கியவர்களின் பெயரை வெளியிடுதல்

(v) கடன் பெறுபவர் அல்லது கடன் வாங்குபவரின் குடும்பம்/சொத்துக்கள்/ நற்பெயருக்கு தீங்கு விளைவிக்க வன்முறை அல்லது பிற ஒத்த வழிமுறைகளைப் பயன்படுத்துதல் அல்லது அச்சுறுத்துதல்

(vi) கடனின் அளவு அல்லது திருப்பிச் செலுத்தாததால் ஏற்படும் விளைவுகள் குறித்து கடன் வாங்கியவரை தவறாக வழிநடத்துதல்.

e. கடன் வாங்கியவரிடமிருந்தோ அல்லது கடனைப் பெற முன்மொழியும் பிற வங்கிகள் / நிதி நிறுவனங்களிடமிருந்தும் கடன் கணக்கை மாற்றுவதற்கான கோரிக்கை பெறப்பட்டால், வங்கிகளின் ஒப்புதல் அல்லது ஆட்சேபனை ஏதேனும் இருந்தால், கோரிக்கை பெறப்பட்ட தேதியிலிருந்து 21 நாட்களுக்குள் அதுபற்றித் தெரிவிக்கப்படும்.
g. வங்கி அதன் ஊழியர்கள் அல்லது அவுட்சோர்ஸ் முகமையின் ஊழியர்களின் தகாத நடத்தைக்கு பொறுப்பேற்க வேண்டும் மற்றும் சரியான நேரத்தில் குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டும். இந்த விஷயம் பற்றிய ஒரு பிரகடனமும் கடன் ஒப்பந்தத்தில் செய்யப்பட வேண்டும்.

**vii) குறை தீர்ப்பு**

குறைகளை தெரிவிக்க வாடிக்கையாளர்களுக்கு உள்ள சேனல்

நிலை 1:
நிலை 1-ல் அழைப்பு மைய எண்கள் உள்ளன: 1860-419-5555, 1860-500-5555 அல்லது அருகிலுள்ள ஆக்சிஸ் வங்கிக் கிளையைத் தொடர்புகொள்ளலாம். பதிலளிப்பதற்கு வங்கி 10 நாட்கள் காலத்தை வரையறுத்திருக்கிறது
கடன் வாங்குபவர்களுக்கு கட்டணமில்லா எண் கடன் அட்டை மூலமாகவும் தெரிவிக்கப்படும்.
நிலை 2:
நிலை 1ல் வாடிக்கையாளருக்கு அளிக்கப்பட்ட பதிலில் வாடிக்கையாளர் திருப்தி அடையவில்லை என்றால், கடன் வாங்கியவர் வங்கியின் நோடல் அலுவலரையும் தொடர்பு
திரு சீசர் பின்டோ
நோடல் அதிகாரி
ஆக்சிஸ் பேங்க் லிமிடெட், NPC1,
5-வது தளம், "ஜிகாபிளெக்ஸ்"
பிளாட் எண் I.T.5, MIDC,
அய்ரோலி நாலெட்ஜ் பார்க்,
அக்ரோலி, நவி மும்பை -400708
மின்னஞ்சல்: - nodal.officer@axisbank.com
தொ.பேசி. 080-61865200
நேரம்: காலை 9:30 முதல் மாலை 5:30 வரை, திங்கள் முதல் சனிக்கிழமை வரை (இரண்டாம் மற்றும் நான்காம் சனிக்கிழமைகள் மற்றும் வங்கி விடுமுறை நாட்கள் தவிர்த்து)
புகாரைப் பெற்றதற்கான ஒப்பளிப்பதையும், 10 நாட்களுக்குள் பதில் அளிக்கப்படுவதையும் வங்கி உறுதி செய்யும்.
கடன் மீட்பது தொடர்பான குறைகளைத் தீர்ப்பதற்கு வங்கி ஒரு பிரத்யேக வழிமுறையைக் கொண்டிருக்க வேண்டும்.